DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No.112/2015

PROSECUTION WITNESS L.W.19/P.W.16

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சிவக்குமார் | Caste | : | |
| Father's Name | : | குருசாமி | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

2 ம் எதிரி ஆஜர். 3 முதல் 5 வரையிலான எதிரிகள் ஆஜர் இல்லை. 3 முதல் 5 வரையிலான எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு - 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 27.08.2024

முதல் விசாரணை

1) நான் தற்போது திருப்பூர் மாவட்டம் அவிநாசி உட்கோட்டத்தில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2) கடந்த 25.02.2015 ம் தேதி நான் கருங்கல்பாளைய காவல்ஆய்வாளராக பொறுப்பில் இருந்தபோது, நிலைய குற்ற எண். 320/2013 சட்டபிரிவு 406, 420 இதச வழக்கை எனது மேல் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். இந்த வழக்கு கோப்பை பார்வையிட்டதில் எனக்கு முன்பு விசாரணை செய்த காவல் ஆய்வாளர்கள் சரிவர புலன்விசாரணை செய்த இவ்வழக்கில் தலைமறைவாக இருந்து வந்த எதிரி விஜய் மற்றும் எதிரி சவுதிகாதர் (எ)மொய்தீன் என்பவரை தேடி கடந்த 27.05.2015 ம் தேதி மாலை 4.00 மணிக்கு, தகவலாளி அடையாளம் காட்ட ஈரோடு பவானி மெயின்ரோடு, பார்க் கேட் பின்புறம் உள்ள பஸ் நிறுத்தம் அருகே நின்று கொண்டிருந்த எதிரி விஜய் என்பவரை கைது செய்து விசாரிக்கும்போது இந்த வழக்கில் உள்ள குற்றத்தினை ஒப்புக் கொண்டார். மேலும் இந்த வழக்கில் தலைமறைவாக இருக்கும் எதிரி வுதிகாதர் (எ)மொய்தீன் என்பவரை பற்றி விசாரிக்க அவருக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று அப்படி ஒரு நபர் யாரும் இல்லை என்றும் விசாரணையில் தெரிவித்தார்.

3) பின் எதிரியை நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பினேன். 28.06.2015 ம் தேதி இவ்வழக்கின் விசாரணை முடித்து இவ்வழக்கின் சட்டபிரிவை 406, 420 இதசவிலிருந்து 406, 420, 511 மற்றும் 109 இதசவாக சட்டபிரிவை மாற்றம் செய்து சட்டபிரிவு மாறுதல் அறிக்கையை கணம் நீதித்துறை நடுவர் எண். 1 க்கு அனுப்பி வைத்தும், இவ்வழக்கில் எதிரிகள் சதீஷ்குமார், வினோத்குமார், அலாவுதீன், ராம்கி மற்றும் விஜய் ஆகியோர் மீது 406, 420, 511 மற்றும் 109 இதசவின் கீழ்

குற்ற அறிக்கை தாக்கல் செய்தேன். **(சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

**எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரானபோதும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.**